05.02.2025 Mcop 318 of 2023 c/w 320 of 2023 .ம.சா2 கலைஞர் செல்வம் (சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

என் வயது, வருமானம்,வேலையை குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் சாலை விதிகளை மதித்து வாகனத்தை ஒட்டினார் என்றாலும், என் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சாலையில் வைத்து நடந்தது என்றால் சரிதான். விபத்திற்கு நான் காரணம் என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் குற்ற வழக்கின் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு விபத்து சமயம் இருசக்கர வாகனம் ஒட்டுவதற்கான ஒட்டுனா் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. நான் ஒட்டுனா் உரிமம் இல்லாமல் விபத்தை ஏற்படுத்தியுள்ளதால் 2ம்எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றாலும் அதுவும் குணமாகிவிட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால் எனக்கு நிரந்தர ஊனம் மற்றும் வருமான இழப்பு எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் அவர் மீது போடப்பட்ட குற்ற வழக்கை அவர் நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயத்தினால் நிற்க மற்றும் நடக்க முடியவில்லை என நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதால் எனக்கு மருத்துவ செலவு என்ற தலைப்பின் கீழ் எதுவும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களின் பரிந்துரை சீட்டுக்கள் தாக்கல் செய்யாததால் மேற்படி பில்களுக்குரிய தொகை எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் ஒட்டிசென்ற வாகனத்திற்கு விபத்து சமயம் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி நிறுனத்திடம் என் வாகனத்திற்கான சேதம் ஏற்பட்டதற்கான தொகையை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி

நிறுவனத்தில் இருந்து நான் வாகன சேதம் ஏற்பட்டதற்கான இழப்பீடு எதுவும் பெறவில்லை என்பதற்காக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகன சட்டபடி தனியாக டி.பி.பி.டி வழக்கு தாக்கல் செய்து தான் இழப்பீடு பெற முடியும் என்பதால் இந்த வழக்கில் வாகன சேதம் ஏற்பட்டதற்கான தொகை எனக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. ஒரு வாகனத்தின் சேதத்தை சேத மதிப்பீட்டாளர் மூலம் மதிப்பீடு செய்து வாகனத்தின் தன்மை மற்றும் காலவரமுறைக்கு ஏற்பு கழிவு செய்து தான் இழப்பீடு வழங்க முடியும் என்பது காப்பீடு சட்ட விதிகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாகன சேதம் ஏற்பட்டதற்கான பில்களின் தொகை பெற இந்தவழக்கில் சட்ட அனுமதி இல்லாததால் மேற்படி தொகை எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி வாகனம் சேதம் ஏற்பட்டதை சரி செய்ததற்கான செலவுகளை சேதம் சரி செய்த கம்பெனியின் மூலம் தான் மேற்படி தொகைகளை உறுதிபடுத்த முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல. 2ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.